**சுருக்கம்**

2011 – 2012 ஆம் கல்வியாண்டிற்கான ஆசிரியர் காலிப்பணியிடங்கள் நிரப்புதல் – பள்ளிக்கல்வி இயக்ககத்தின் கட்டுப்பாட்டிலுள்ள பள்ளிகளில் முதுகலை ஆசிரியர், பட்டதாரி ஆசிரியர், உடற்கல்வி ஆசிரியர் மற்றும் சிறப்பாசிரியர் காலிப்பணியிடங்களை நிரப்ப அனுமதி அளித்தல் – ஆணை – வெளியிடப்படுகிறது.

---

**பள்ளிக்கல்வித் (வ.செ.2) துறை**

**அரசாணை (நிலை) எண். 169** **நாள். 02.11.2011**

**படிக்கப்பட்டவை:-**

பள்ளிக் கல்வி இயக்குநர் கடித எண். 106300/சி5/இ2/10, நாள்18.03.2011, 22.6.2011 மற்றும் 23.06.2011.

----

**ஆணை:-**

பள்ளிக்கல்வி இயக்குநர், மேலே படிக்கப்பட்ட கடிதத்தில் 2011–2012 ஆம் கல்வியாண்டில் பள்ளிக்கல்வித் துறையில் நிரப்பப்பட வேண்டிய முதுகலை ஆசிரியர், பட்டதாரி ஆசிரியர், உடற்கல்வி ஆசிரியர் மற்றும் சிறப்பாசிரியர் காலிப்பணியிட விவரங்கள் 01.6.2011 நிலவரப்படி கணக்கிட்டு அப்பணியிடங்களை நிரப்ப உரிய அனுமதி கோரி அரசுக்கு கருத்துரு அனுப்பியுள்ளார்.

2. பள்ளிக்கல்வி இயக்குநரின் கருத்துருவை அரசு நன்கு ஆய்வு செய்தது. பள்ளிக்கல்வி இயக்குநரின் கட்டுப்பாட்டில் இயங்கும் அரசு உயர்நிலை/மேல்நிலைப் பள்ளிகளில், 01.6.2011 அன்றைய நிலவரப்படி, காலியாக உள்ள முதுகலை ஆசிரியர், பட்டதாரி ஆசிரியர், உடற்கல்வி ஆசிரியர் மற்றும் சிறப்பாசிரியர் பணியிடங்களை பின்வருமாறு நிரப்பலாம் என கருதி அவ்வாறே அரசு ஆணையிடுகிறது.

**(i) முதுகலை ஆசிரியர்கள்**

| ***இனம்*** | ***01.06.2011 நிலவரப்படி காலிப் பணியிடங்களின் எண்ணிக்கை*** | ***நேரடி நியமனம் மூலம் நிரப்பப்பட வேண்டியவை*** | ***பதவி உயர்வு மூலம் நிரப்பப்பட வேண்டியவை*** |
|---|---|---|---|
| முதுகலை ஆசிரியர் | 2617 | 1305 | 1312 |
| ***மொத்தம்*** | 2617 | 1305 | 1312 |

**(ii)பட்டதாரி ஆசிரியர்கள்**

| ***இனம்*** | ***01.06.2011 நிலவரப்படி காலிப் பணியிடங்களின் எண்ணிக்கை*** | ***நேரடி நியமனம் மூலம் நிரப்பப்பட வேண்டியவை*** | ***பதவி உயர்வு மூலம் நிரப்பப்பட வேண்டியவை*** |
|---|---|---|---|
| பட்டதாரி ஆசிரியர் (தமிழ்) | 1209 | 403 | 790 |
| அமைச்சுப் பணியாளர் பதவியிலிருந்து 2% ஆசிரியர் பணியிட ஒதுக்கீடு (தமிழாசிரியர்) | –– | –– | 16 |
| பட்டதாரி ஆசிரியர் இதர பாடங்கள் | 4372 | 3381 | 971 |
| அமைச்சுப் பணியாளர் பதவியிலிருந்து 2% ஆசிரியர் பணியிட ஒதுக்கீடு (இதர பட்டதாரி ஆசிரியர்கள்) | –– | –– | 20 |
| உடற்கல்வி ஆசிரியர் நிலை –II | 51 | –– | 51 |
| சிறுபான்மை மொழி/ பாடங்கள் | 44 | 32 | 12 |
| ***மொத்தம்*** | ***5676*** | ***3816*** | ***1860*** |

**(iii) உடற்கல்வி மற்றும் சிறப்பாசிரியர்கள்**

| ***இனம்*** | ***01.06.2011 நிலவரப்படி காலிப் பணியிடங்களின் எண்ணிக்கை*** | ***நேரடி நியமனம் மூலம் நிரப்பப்பட வேண்டியவை*** | ***பதவி உயர்வு மூலம் நிரப்பப்பட வேண்டியவை*** |
|---|---|---|---|
| உடற்கல்வி ஆசிரியர்கள் | 680 | 680 | – |
| ஓவியம் | 97 | 78 | – |
| அமைச்சுப் பணியாளர் பதவியிலிருந்து 20% ஆசிரியர் பணியிட ஒதுக்கீடு (ஓவிய ஆசிரியர்) | – | – | 19 |
| இசை | 41 | 41 | – |
| | | | |
| தையல் | 47 | 47 | – |
| **மொத்தம்** | **865** | **846** | **19** |

<u>(iv) தொழிற்கல்வி  ஆசிரியர்கள்</u>

| *இனம்* | *01.06.2011 நிலவரப்படி காலிப் பணியிடங்களின் எண்ணிக்கை* | *நேரடி நியமனம் மூலம் நிரப்பப்பட வேண்டியவை* | *பதவி உயர்வு மூலம் நிரப்பப்பட வேண்டியவை* |
|---|---|---|---|
| வேளாண் பட்டதாரி தொழிற்கல்வி ஆசிரியர் | 25 | 25 | – |
| *மொத்தம்* | 25 | 25 | – |

3. மேற்காண் காலிப்பணியிடங்கள் அனைத்தையும் நடைமுறையில் உள்ள விதிமுறைகளின்படி உடனடியாக நிரப்ப நடவடிக்கை எடுக்குமாறு, பள்ளிக்கல்வி இயக்குநர் அறிவுறுத்தப்படுகிறார்.

(ஆளுநரின் ஆணைப்படி)

த.சபிதா
அரசுச் செயலாளர்

பெறுநர்
பள்ளிக்கல்வி இயக்குநர்,சென்னை – 6.
தலைவர் ஆசிரியர் தேர்வு வாரியம், சென்னை – 6.

<u>நகல்</u>
பள்ளிக்கல்வி அமைச்சரின் முதுநிலை
நேர்முக உதவியாளர், சென்னை – 9.
முதன்மைச் செயலரின் தனிச் செயலாளர்,
பள்ளிக்கல்வித்துறை, சென்னை – 9.
பள்ளிக்கல்வித்துறை (அனைத்துப்பிரிவுகள்),
சென்னை – 9.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.